**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2016**

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ("கூட்டுத்தாபனம்") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கம் செய்யப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாக பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்)**

பின்வரும் நியமங்களுடனான விலகல் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) எல்கேஏஸ் - 01, நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் மூலம் வேறு வகையில் அனுமதிக்கப்பட்டால் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானங்களும் செலவினங்களும் ஒன்றிற்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் கடன்கொடுத்தோர் கணக்குகள், உப ஒப்பந்ததாரர் கணக்குகள், சென்மதி மற்றும் ஏற்பாட்டுக் கணக்குகள், தேசிய உபகரண மற்றும் இயந்திர நிறுவனத்தின் (என்ஈஎம்ஓ) கடன்கொடுத்தோர் கணக்குகள் மற்றும் பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணக் கணக்குகளிலுள்ள வரவு மீதிகள் அக் கணக்குகளின் செலவு மீதிகளிற்கெதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால் அத்தகைய கணக்குகளின் செலவு மீதிகள் முறையே ரூபா 44,316,910, ரூபா 193,525,178, ரூபா 101,764,588, ரூபா 25,191,232 மற்றும் ரூபா 309,493,310 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) எல்கேஏஸ் - 02, இருப்பு**

நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறிய நிகர பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுப்பொருள் மற்றும் மூலப்பொருள் இருப்புக்களின் கிரயம் தேறிய நிகர பெறுமதியின் 95 சதவீதமாக பெறுமதியிடப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட விற்பனைக் கிரயத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது நம்பிக்கைகொள்ள முடியாதிருந்தது.

**(இ) எல்கேஏஎஸ் - 16, ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 50,492,060 மற்றும் ரூபா 2,723,962 கிரயமான முறையே நிலையான சொத்துக்கள் மற்றும் மென்பொருள் என்பன அத்தகைய சொத்துக்களின் பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமல் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் இலங்கை கணக்கீட்டு நியமம் - 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எஸ்எல்எவ்ஆர்எஸ் - 05, விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் தொடரப்படாத செயற்பாடுகள்**

ரூபா 3,000,000 மற்றும் ரூபா 500,000 கிரயமான முறையே கிறவுலர் கிறேன் (Crawler crane) மற்றும் எயார் கொம்பிறஷர் (Air compressor) என்பன 2017 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படாமல் நிலையான சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தன.

**(உ) எல்கேஏஎஸ் - 37, ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

(i) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான பெறுமதி சேர் வரி மற்றும் மீளாய்வாண்டிற்கான பொருளாதார சேவைக் கட்டணம் என்பன செலுத்தப்படாதமை தொடர்பாக இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்ட முறையே ரூபா 250,519,976 மற்றும் ரூபா 2,598,573 தொகையான தண்டப்பணங்களிற்குரிய ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இறைவரித் திணைக்களத்தின் வேலைத்தளத்திலுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கு மின்தூக்கியை (lift) வழங்கியமை தொடர்பாக ரூபா 96,942,000 தொகையை கோரி கூட்டுத்தாபனத்திற்கெதிராக சட்ட வழக்கொன்றை டீசல் எஞ்சினியரிங் மோட்டார் கம்பனி (டிஈஎம்ஓ) தாக்கல் செய்திருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலும் உப ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களால் ரூபா 66,695,475 தொகையை கோரி கூட்டுத்தாபனத்திற்கெதிராக தொடரப்பட்ட 13 வழக்குகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) எல்கேஏஎஸ் - 39, நிதிக்கருவிகள், இனங்காணுதல் மற்றும் அளவீடு செய்தல்**

(i) கடன் மற்றும் பெறவேண்டியவைகள் காலக்கழிவு கிரய முறையில் அளவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் என்ஈஎம்ஓ இல் உள்ள ரூபா 26,985,543 தொகையான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வியாபார பெறவேண்டிய மீதி காலக்கழிவிடப்பட்ட கிரய முறையில் அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் அவ் மீதிகள் அதிகரித்துக் காட்டப்படுவதற்கான சாத்தியத்தன்மை காணப்படுகின்றது.

(ii) கூட்டுத்தாபனத்தின் சேவைப் பிரிவிற்குச் சொந்தமான ரூபா 39,613,600 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 20,631,145 தொகை 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. எனினும் அம் மீதிகள் தொடர்பாக எந்தவொரு நட்டக்கழிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள், சேவைகளிற்கான முற்பணங்கள், தொழிலாளர் ஒப்பந்தங்களின் கட்டுநிதி, விசேட காசு முற்பணங்கள், கடன்பட்டோர் நிறுத்திவைப்புக்களிலிருந்தான முற்பணங்கள், என்ஈஎம்ஓ இலுள்ள சேவைநாடுநரிடமிருந்தான சேகரிப்புக்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் பேரேட்டுக் கணக்கில் முறையே ரூபா 1,770,717, ரூபா 405,653, ரூபா 600,320, ரூபா 6,025,672, ரூபா 25,535,375, ரூபா 13,260,041 மற்றும் ரூபா 41,610,540 ஆன வழமைக்கு மாறான செலவு மீதிகள் காணப்பட்டதனால் உரிய கணக்குகளின் பெறுமதிகள் அதே தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (8040) மற்றும் செலுத்த வேண்டிய உப ஒப்பந்ததாரர் கணக்கு என்பவற்றில் முறையே ரூபா 901,123 மற்றும் ரூபா 596,400 வழமைக்கு மாறான வரவு மீதிகள் காணப்பட்டமையால் அத் திகதியிலுள்ளவாறான அப் பெறுமதிகள் அதே தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) ரூபா 9,755,917 கூட்டுமொத்தமான வழமைக்கு மாறான செலவு மீதிகள் தனிப்பட்ட கடன்பட்டோர் மீதியில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக தனிப்பட்ட கடன்பட்டோர் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிர்மாணம், நிர்மாணக் கூறு, இயந்திரவியல் மற்றும் மின்னியல் மற்றும் வீதி மற்றும் பாலம் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,977,558 கூட்டுமொத்தமான செலவினம் எதிர்மறை மீதிகளாக காட்டப்பட்டிருந்தன. இதன் விளைவாக ஆண்டின் இலாபம் ரூபா 343,905 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமானது செயற்திட்டத்தின் உண்மையான மதிப்பிடப்பட்ட கிரயத்தை எடுப்பதற்குப் பதிலாக மொத்த செயற்திட்ட கிரயத்தின் 89 சதவீதமாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் செயற்திட்ட பூர்த்தியாக்கல் சதவீதம் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்காததால் ஆண்டிற்கான இலாபம் மற்றும் திரண்ட இலாபம் என்பன முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு 13 ஏக்கர்கள் 03 றூட்கள் மற்றும் 35 பேர்ச்கள் பரப்பளவான எக்கலவிலுள்ள காணியின் பெறுமதி மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) கணக்கீட்டு தவறு காரணமாக செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) மீதி மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,251,229 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 60,656,980 தொகையான கடன்பட்டோர் மீது நட்டக்கழிவிற்காக மேலதிகமாக ஏற்பாடு செய்திருந்தது.

(ஐ) இயந்திரத்தை வாடகைக்கு பெற்றதிலிருந்து ஏற்பட்ட ரூபா 7,695,261 கூட்டுமொத்தமான வெளியீட்டு வரி இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக வற் மீதான பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) ரூபா 2,979,078 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டோ இருக்கவில்லை. இதன் விளைவாக அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்தும் பொறுப்பு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) மீளாய்வாண்டிற்கான ரூபா 1,190,229 தொகையான செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) அனுப்பப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக காட்டப்பட்டோ இருக்காததன் விளைவாக அதே தொகையால் மீளாய்வாண்டிற்கான இலாபம் அதிகரித்தும் பொறுப்பு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஔ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 1,149,661 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| | **ரூபா** |
|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 156,390,341 |
| கணக்காய்வுக் கணிப்பீட்டின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 155,240,680 |
| அதிகரித்துக் காட்டப்பட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | ---------------- |
| | **1,149,661** |
| | ========= |

(ஃ) சேருவவில ராஜமஹா விஹாரைக்குச் சொந்தமான ரூபா 7.2 மில்லியன் பொறுமதியான காணி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட காணியின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(க) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 115.21 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடம் என்ஈஎம்ஓ இற்குச் சொந்தமற்றிருந்த போதிலும் அதன் மீதான ரூபா 3,231,000 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ரூபா 807,750 தொகையான பெறுமானத்தேய்வு என்பன மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(கா) மானியமாக பெறப்பட்டிருந்த ரூபா 1,293,933 தொகையான கட்டிடம் மற்றும் ரூபா 28,000,772 தொகையான பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் என்பன மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்டிருந்தது. எனினும் இவை அகற்றப்பட்டிருக்கவில்லை. அச் சொத்துக்களின் முறையே ரூபா 29,294,705 கிரயம் மற்றும் ரூபா 13,661,882 தொகையான திரண்ட பெறுமானத்தேய்வு என்பன நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. இதன் விளைவாக கட்டிடம் மற்றும் பொறி, இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(கி) புகையிரதத் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்ட ரூபா 9,456,048 பெறுமதியான கொங்கிறீட் சிலிப்பர்கள் (concrete slippers) 05 ஆண்டுகளிற்கு மேலாக இருப்புக்களில் காணப்பட்டன. அவற்றின் மீது 25 சதவீதம் அல்லது ரூபா 2,364,012 நட்டக்கழிவு மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக இருப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,092,036 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் எக்கல தளத்தில் காணப்படுகின்ற ரூபா 2,647,130 பெறுமதியான விற்பனை செய்யப்பட முடியாத முடிவுப் பொருட்கள் நட்டக்கழிவிடப்பட்டிருக்கவில்லை.

(கீ) என்ஈஎம்ஓ இல் நீண்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 62,238,799 பெறுமதியான மூலப்பொருள் இருப்புக்களிற்காக நட்டக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதன் விளைவாக மூலப்பொருள் இருப்புக்களின் நியாயப் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(கு) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வைப்புக் கணக்கில் ரூபா 1,224,809 தொகையான வழமைக்கு மாறான செலவொன்று காணப்பட்டதால் வைப்புக் கணக்கிலுள்ள மீதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் மற்றும் என்ஈஎம்ஓ இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட உள்ளக குழு மீதிகளிற்கிடையே ரூபா 62,370,433 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், என்ஈஎம்ஓ இல் காட்டப்பட்ட ரூபா 451,366,524 நடைமுறைக் கணக்கு மீதியில் ரூபா 406,473,523 தொகை ஆரம்ப மீதியாக காணப்பட்டது. அம்மீதியின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய மீதிகளிற்கிடையே ரூபா 216,068,743 வேறுபாடு காணப்பட்டது.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,328,759 இனங்காணப்படாத வைப்பு மீதி என்ஈஎம்ஓ இன் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாமல் காணப்பட்டன.

(ஈ) செலுத்த வேண்டிய வற் ரூபா 16,312,677 ஆரம்ப வரவு மீதியை உள்ளடக்குகின்றது. இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 3,351,644 இனங்காணப்படாத வைப்புக் கணக்கு மீதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காணப்பட்டன.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிறீட் கலவையின் (சீஎம் 02) கிரயம் ரூபா 850,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. எனினும், இது ரூபா 650,000 ஆக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 200,000 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) ரூபா 696.31 மில்லியன் பெறுமதியான பொறி மற்றும் இயந்திர உபகரணம் மற்றும் ரூபா 39.34 மில்லியன் பெறுமதியான வாகனம் என்பன மானியமாக பெறப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பான தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) எக்கலவிலுள்ள (தள இல. 237) முன்வார்ப்பு முற்றத்திற்காக (pre cast yard) மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 5,026,576 கூட்டுமொத்தமான இருப்பு பற்றாக்குறையையும் ரூபா 3,295,165 தொகையான இருப்பு மிகையும் இனங்காணப்பட்டிருந்தன. இதற்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இரண்டு பவுசர்களின் கிரயம் ரூபா 530,000 ஆக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 567,000 தொகையாக கொண்டுவரப்பட்டிருந்தது. இதனால் ரூபா 37,000 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) இரண்டு உழவு இயந்திரப் பெட்டிகளின் கிரயம் ரூபா 330,000 மற்றும் ரூபா 242,000 ஆக நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவை

நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 348,500 மற்றும் ரூபா 265,000 ஆக கொண்டுவரப்பட்டிருந்தன. இதனால் ரூபா 18,500 மற்றும் 23,000 விளக்கடளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஓ) 2014 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 1507 சிலிப்பர் உருப்படிகளின் (items of slippers) பெறுமதி ரூபா 8,958,361 ஆக காணப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய இருப்புக்கள் ரூபா 9,456,048 ஆக காணப்பட்டன. இருப்புக்களில் ஏற்பட்ட அத்தகைய அதிகரிப்பிற்கான சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் எதிராக சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்கு விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | காசு முற்பண ஆரம்ப மீதி | 4,881,229 | பட்டியல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு |
| (ஆ) | கடன்பட்டோர் மீதி - என்ஈஎம்ஓ | 14,031,470 | வயதுப் பகுப்பாய்வு |
| (இ) | செலுத்த வேண்டிய உப ஒப்பந்ததாரர் ஆரம்ப மீதி | 39,073,341 | விபரமான பட்டியல்கள் |
| (ஈ) | செலுத்த வேண்டிய ஜீஎஸ்ரீ | 9,594,208 | விபரமான பட்டியல்கள் |
| (உ) | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வெளியீடு | 7,820,468 | விபரமான பட்டியல்கள் |
| (ஊ) | செலுத்த வேண்டிய ஏனைய வரி | 1,766,402 | விபரமான பட்டியல்கள் |
| (எ) | பெறவேண்டிய வைப்பு மீதி | 11,839,770 | வயதுப் பகுப்பாய்வு |
| (ஏ) | செலுத்தவேண்டிய வாடிக்கையாளர் மீதி | 543,921,906 | விபரமான பட்டியல்கள் |
| (ஐ) | என்ஈஎம்ஓ இன் நிலையான சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு | 118,245,087 | விபரமான பட்டியல்கள் |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 772,972,662 தேறிய நிறுத்தி வைத்தல் மீதி அறவிடப்படாதிருந்தது. மேலும், ரூபா 896,200,501 கூட்டுமொத்தமான ரூபா 5 மில்லியனிற்கு மேற்பட்ட பிடித்துவைத்தல் மீதிகள் 05 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன.

(ஆ) ரூபா 8,956,071 தொகையான கட்டளை முற்பண காசோலையின் ஆரம்ப மீதி தீர்ப்பனவு செய்யப்படாமல் கணக்குகளில் காணப்பட்டன.

(இ) ரூபா 13,734,094 தொகையான வெளிநாட்டுக் கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி சேவைப் பிரிவில் அறவிடப்படாமல் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பிரிவிலுள்ள ரூபா 29,968,288 தொகையான வெளிநாட்டுக் கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 255,388,399 கூட்டுமொத்தமான ரூபா 01 மில்லியனிற்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமல் 05 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட வயதுப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளிற்கு மேலாக சேவை நாடுநர்களிடமிருந்து பெறப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 182,345,510 தொகையானதுடன் அவை அறவிடப்படாது காணப்பட்டன.

(ஊ) என்ஈஎம்ஓ இற்குச் சொந்தமான ரூபா 1,282,099 தொகையான ஏனைய சேவைகளிற்கான முற்பண மீதியில் ரூபா 501,763 தொகை 3 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன.

(எ) என்ஈஎம்ஓ இன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 13,088,124 தொழிலாளர் ஒப்பந்த கணக்கு மீதியில் ரூபா 3,355,324 தொகை 3 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன.

(ஏ) ரூபா 33,182,436 பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பண மீதியில் ரூபா 16,425,111 தொகை அறவிடப்படாமல் 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டன.

(ஐ) ரூபா 2,419,867 விசேட காசு முற்பண மீதி மற்றும் ரூபா 3,196,096 மீளச்செலுத்தப்பட வேண்டிய வைப்புக் கணக்கு மீதி என்பன 2013 ஆம் ஆண்டிலிருந்து அறவீடு செய்யப்பட்டோ அல்லது தீர்ப்பனவு செய்யப்பட்டோ இருக்காது நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 46,823,823 கூட்டுமொத்தமான பெறுமதி சேர் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,193,334 கூட்டுமொத்தமான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டண திருத்த அதிகாரச்சட்டத்தின் 02 ஆம் பிரிவு | காலாண்டு ஒன்றிற்கு ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் உழைக்கும் நிறுவனங்களால் காலாண்டு ஒன்றிற்கு ரூபா 30 மில்லியனுக்கு மேற்படாத வருமானத்தில் 0.5 சதவீதத்திற்குச் சமமான பொருளாதார சேவைகள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் உழைக்கப்பட்ட ரூபா 595,815,627 தொகையான வருமானம் தொடர்பில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 2,979,078 தொகையான பொருளாதார சேவைகள் கட்டணம் இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 744,581,777 வரிக்கு பின்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடும் போது ரூபா 904,479,014 வரிக்கு பின்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகளில் ரூபா 15,966,127 ஆன கடுமையான வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டுகின்றது. வட்டிச் செலவினம் ரூபா 44,819,242 ஆல் அதிகரித்தமை, நிர்வாக செலவினம் ரூபா 150,310,378 ஆல் அதிகரித்தமை, ஏனைய வருமானம் ரூபா 181,870,344 ஆல் குறைவடைந்தமை மற்றும் நிதிக் கிரயம் ரூபா 50,544,183 ஆல் அதிகரித்தமை என்பன இந்நிலைமைக்கு பங்களித்திருந்த பிரதான காரணங்களாகும்.

#### 3.1.1 கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச்சேர்க்கை

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச் சேர்க்கை விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வரிக்கு பின்னரான இலாபம் | (904,479,014) | (744,581,777) | 74,534,988 | 122,726,033 | 204,121,567 |
| (+) ஊழியர் நலன் | 227,564,599 | 188,769,676 | 165,177,185 | 175,236,245 | 105,922,244 |
| செலுத்தப்பட்ட வரி - வற் | 78,839,708 | 79,009,022 | 154,211,263 | 223,179,026 | 292,982,089 |
| - ஈஎஸ்சீ | - | - | - | - | 13,039,101 |
| - என்பீரீ | 7,479,913 | 5,255,365 | 6,870,861 | 7,904,555 | 6,337,719 |
| பெறுமானத்தேய்வு | 252,023,956 | 253,333,230 | 250,696,182 | 131,318,279 | 66,472,758 |
| கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச் சேர்க்கை | (338,570,838) | (218,214,484) | 651,490,479 | 660,364,138 | 688,875,478 |

கூட்டுத்தாபனத்தின் பெறுமதிச்சேர்க்கை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதன் பின்னர் இது மீளாய்வாண்டு வரை அசாதாரண எதிர்மறை விளைவுகளாக காட்டப்பட்டிருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### 3.2.1 இலாபத்தன்மை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டு நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டில் மிகையொன்று காணப்பட்ட போதிலும் இது 2012 தொடக்கம் மீளாய்வாண்டு வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் 2012 ஆம் ஆண்டின் ரூபா 204,121,567 தொகையான மிகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 904,479,014 பற்றாக்குறையாக வந்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 2,680,642,996 | 3,168,016,408 | 7,403,418,660 | 7,965,731,512 | 7,951,205,894 |
| மொத்தலாபம் | (747,945,689) | (799,394,028) | 195,346,353 | 522,549,676 | 653,919,737 |
| (-) நிர்வாகச் செலவினம் | (423,964,951) | (273,654,573) | (388,165,985) | (424,107,378) | (439,624,663) |
| செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | (1,171,910,640) | (1,073,048,601) | (192,819,632) | 98,442,298 | 214,295,074 |
| (+) ஏனைய வருமானம் | 244,566,731 | 426,437,075 | 299,423,834 | 121,717,774 | 25,910,734 |
| (-) தேறிய நிதி வருமானம்/ (செலவினம்) | (112,768,542) | (62,224,359) | (59,998,458) | (71,587,241) | (14,297,253) |
| வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்) | (1,040,112,451) | (708,835,885) | 46,605,744 | 148,572,831 | 225,908,555 |
| (-) வரிகள் | 135,633,437 | (35,745,892) | 27,929,244 | (25,846,798) | (21,786,988) |
| வரிக்கு பின்னரான இலாபம் / (நட்டம்) | (904,479,014) | (744,581,777) | 74,534,988 | 122,726,033 | 204,121,567 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினம் 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 42.64 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய நிதி செலவினம் 44.82 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னரான நட்டம் 31.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(உ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்குப் பின்னரான நட்டம் 17.67 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3.2.2 கணக்கீட்டு விகிதங்கள்**

மீளாய்வாண்டிற்கான முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறுள்ளன.

| **கணக்கீட்டு விகிதம்** | **2015** | **2016** |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| மொத்தலாப விகிதம் | (25.23) | (27) |
| தேறியலாப விகிதம் | (22.37) | (38.8) |
| புரள்வு மீதான நிர்வாக செலவினம் | 8.64 | 15.81 |
| புரள்வு மீதான தேறிய நிதி செலவினம் | 1.96 | 4.20 |
| நடைமுறை விகிதம் | 0.98 | 0.94 |
| விரைவு விகிதம் | 0.92 | 0.88 |

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்தலாப விகிதம் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறியலாப விகிதம் 72 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் 0.98 இலிருந்து 0.94 வரை குறைவடைந்திருந்த அதேநேரம் விரைவு விகிதம் 0.92 இலிருந்து 0.88 வரை குறைவடைந்திருந்தது.